சமூக அறிவியல் ஏடான "நர்சுரம்" சஞ்சிகையை சாவகச்சேரியில் பெற
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(சி-6772)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 11 திங்கட்கிழமை (27 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 31

அம்புலிமாமா, பூந்தளிர், ராணிகாமிக்ஸ், இந்தியா டுடே, தாரகை, பாலமித்ரா, ராணி, கோகுலம் போன்ற சஞ்சிகைகளை சாவகச்சேரியில் பெறுவதற்கு
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி,
சாவகச்சேரி
(சி-6772)

# தேர்தலில் ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு ஆதரவளிக்க
# தொண்டமான் சிறிமாவுக்கு வாக்குறுதி?

## விடைத்தாள்கள் கப்பலில் அனுப்பப்படும்

அண்மையில் நடைபெற்ற ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்கள் இன்று கொழும்பு புறப்படவுள்ள 'மாஹோ' கப்பலில் எடுத்துச் செல்லப்படவிருப்பதாக யாழ் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-5)

## இனப்பிரச்சினை உட்பட பல விடயங்களில் இணக்கமாம்

கொழும்பு, டிசம்பர் 27

அடுத்த வருடத்தில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவளிப்பதாக —

அமைச்சர் தொண்டமான் வாக்குறுதி அளித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானும், திருமதி பண்டாரநாயக்காவும் மூன்று தடவைகளுக்கு மேல் சந்தித்துப் பேசியதாகவும் நம்பப்படுகிறது.

இப்பேச்சுக்களின் போது இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, மலையகத் தமிழர்களின் அரசியல் அந்தஸ்து, தோட்டத் தொழில் துறை உட்பட பல விடயங்களில் இருசாராருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்களின் மூலம் தெரிய வந்தது.

ஐ.தே.க இ.தொ. காங்கிரஸ் உறவில் விரிசல் கண்டு வருவதால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரியை வெளியேற்ற முடிவாம்!
### ஜெனிவாவுக்கு இது பற்றி அறிவிப்பு

கொழும்பு, டிச. 27

வடபகுதிக்கு 432 "பென் டோர்ச் பற்றறி"களை எடுத்துச்செல்ல முற்பட்டார் என்று குற்றஞ் சாட்டப்படும் செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவின் அதிகாரி ஒருவரை ஸ்ரீலங்கா அரசு தனது நாட்டை விட்டு வெளியேற்ற முடிவு செய்திருப்பதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பதை வெளியிட மறுக்கும் இலங்கை அரசு, இச்சம்பவத்தை ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் தலைமையகத்துக்குத் தெரிவித்து இறுதி முடிவை எடுக்கும் என்று சொல்லப்படுகிறது.

வவுனியா சோதனை முகாமில் வைத்து "பற்றறி"களை செஞ்சிலுவைச் சங்க ஊழியர் ஒருவரிடம் இருந்து தாம் கைப்பற்றியிருப்பதாக இலங்கை அரசு கூறியதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஒ-ஏ-ப)

### ம. எண்ணெய் இறக்குவது தொடர்கிறது
## காலநிலை சீராக இருப்பின் மாஹோ இன்று திரும்பும்

யாழ்ப்பாணம், டிச. 27

நேற்று நிலவியது போல காலநிலை சீராக இருந்தால் 'மாஹோ' கப்பல் இன்று மண் எண்ணெய் பரல்களை இறக்கி முடித்து விட்டு, கொழும்பு திரும்பிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று காலநிலை சீராக இருந்ததை அடுத்து கப்பலில் இருந்து சுமார் 800 பரல்கள் இறக்கப்பட்டன. தனித்தனி பரல்களாக கப்பலில் இருந்து கடலில் மிதக்கவிடப்பட்டு அலைகளின் உதவியுடன் அவை கரைக்குத் தள்ளிவரப்பட்டன.

இன்றும் காலநிலை சீராக இருப்பின் எஞ்சியுள்ள 700 பரல்களையும் இறக்கி முடிக்க முடியும் என்றும்

அப்படி இறக்கி முடிக்கப்பட்டால் இன்று மாலை கப்பல் கொழும்பு திரும்பிச் செல்லும் என்றும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ 5-173)

## பருத்தித்துறைக்கு வருமாறு பயணிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், டிச. 27

தற்சமயம் பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் இறக்கி வரும் 'மாஹோ' கப்பல் இன்று பிற்பகல் கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்துள்ள பயணிகள் அனைவரையும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிவித்துள்ளார். (ஒ-5)

## கொழும்பில் இருந்தே வடபகுதிக்கு மா வரும்

யாழ்ப்பாணம், டிச. 27

திருமலை பிறிமா ஆலையில் மா கையிருப்பில் இல்லாததால், யாழ். மாவட்டத்துக்கு அவசர தேவையாக உள்ள மாவினை கப்பல் மூலம் எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இன்று பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படவுள்ள 'மாஹோ' கப்பல் பயணிகளை திருமலையில் இறக்கிவிட்டு 'பிறிமா' ஆலையில் இருந்து 6 ஆயிரம் மெற்றிக்தொன் கோதுமை மாவினை ஏற்றிக் கொண்டு மீண்டும் பருத்தித்துறைக்கு வர ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் திருமலை பிறிமா ஆலையில் தற்சமயம் மா கையிருப்பில் இல்லை என யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து 'மாஹோ' கப்பல் திருமலையில் பயணிகளை இறக்கிவிட்டு கொழும்பு திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கப்பல் மூலம் கொழும்பு துறைமுகத்தில் இருந்து மாவினை எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)

# வை.கோ. தலைமையில் போட்டி தி.மு.க. உதயம்

### பொதுக்குழுவின் 813 பேரில் 437 பேர் ஆதரவாம்

திருச்சி, டிச. 27

திரு வை. கோபாலசாமி தலைமையில் போட்டி திராவிட முன்னேற்றக் கழகம் நேற்று ஆரம்பிக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



தி.மு.க. பொதுக்குழுவின் மொத்த உறுப்பினர்கள் 831 பேர் என்றும் —

அவர்களில் 437 பேர் நேற்று திருச்சியில் கூடி திரு. கோபாலசாமியை பொதுச் செயலாளராகத் தெரிவு செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் திரு. கோபாலசாமி செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோது தமது தலைமையிலான தி.மு.கவே உண்மையான தி.மு.க. என்று அறிவித்தார்.

தி.மு கவில் இருந்து அதன் தலைவர் மு. கருணாநிதி, பொதுச் செயலாளர் க. அன்பழகன், பொருளாளர் சாதிக் பாட்சா, மற்றும் ஆற்காடு வீராசாமி ஆகியோரை வெளியேற்றும் தீர்மானங்களும் போட்டி தி.மு.க பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டதாகவும் திரு. கோபாலசாமி தெரிவித்தார்.

இதற்கிடையில் —

வை. கோபாலசாமி கூட்டிய தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம் சட்டவிரோதமானது என்று தி.மு.க தலைவர் மு.



கருணாநிதி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தி.மு.கவில் வெளியேற்றப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தோல்விகளை மறைத்து வரும் இராணுவத்தால்
## புலிகளை வெல்ல முடியாது என்பது நிரூபணமாகி விட்டது
### ஆங்கிலப் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிச. 27

தோல்விகளைப் பெற்று அதிலிருந்து படிப்பினையைப் பெறாத இராணுவத்தால் —

தனது தோல்விகளை மூடி மறைத்து வரும் இராணுவத்தால் —

விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பது நிரூபணமாகி விட்டது.

— இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அனுபவத்தில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளும் விடுதலைப் புலிகள் நான்கு இராணுவ முகாம்களை வெற்றி கொண்டுள்ளனர் தோல்விகளையே வெற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைப் பகுதியில் அடிக்கடி சுற்றிவளைப்பு
### ஏழாம் குறிச்சியில் 500 தமிழர் கைது

யாழ்ப்பாணம், டிச. 27

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமங்கள் விசேட அதிரடிப்படையினரால் அடிக்கடி சுற்றிவளைக்கப்படுகின்றன. ஏழாம் குறிச்சிப் பகுதியை அண்மையில் சுற்றிவளைத்த படையினர் அங்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் படையினரின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேபோன்று அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, பனங்காடு, கோளாவில் பகுதிகளிலும் படையினரின் சுற்றிவளைப்புக்களில் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவித்தன.

கைது செய்யப்படும் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதாகவும், முகமூடிகளின் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

ஈ.பி.ஆர்.எல்.எவ். தேசவிரோதிகளால் தமிழர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு வருவதாகவும், அவர்களின் வன்முறைகளால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### தலைநகர் கொழும்பில் இன்று
## பத்திரிகையாளர் நடத்தும் சமாதான மாநாடு!

லண்டன், டிச 27

"சமாதானத்துக்கு வழி" என்ற தலைப்பிலான மாநாடு ஒன்று கொழும்பு தர்மபால மாவத்தையில் உள்ள ஜெயவர்த்தன சேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளதாக. பி.பி.சி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானம் பிறக்கவேண்டும் என்ற நோக்குடன் இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. சுதந்திரப் பத்திரிகையாளர்கள் உட்பட கல்விமான்கள் பலர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி அண்மையில் லண்டனில் நடத்தப்பட்ட சமாதான மாநாட்டின் பின்னர் இடம்பெறும் அதேபோன்ற மாநாடு இது என பி.பி.சி தெரிவித்தது.

## மீண்டும் ஒரு தாழமுக்கம்

கொழும்பு, டிச. 27

கிழக்குக் கரையோரத்தை அடுத்துள்ள பகுதியில் மீண்டும் ஒரு தாழமுக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்தது.

வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் விட்டு விட்டு மழை பெய்யும் என்றும் —

கிழக்கு மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்திலும் சில இடங்களில் பலத்த மழை யாக இருக்கும் என்றும் —

கிழக்கு மற்றும் தென் கிழக்கு கரையை அடுத்துள்ள கடல் பகுதிகள் கொந்தளிப்பாக இருப்பதுடன், ஓரளவு பலமான காற்று வீசும் என்றும் — இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது. (ஒ-5)

## 5 அடி வெள்ளம் வீதியில்!

கொழும்பு, டிச. 27

பொலநறுவை — மட்டக்களப்பு நெடுஞ்சாலையில், மகாவலி பாலத்துக்கு அருகே உள்ள பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த கடும் மழையினால் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நெடுஞ்சாலையில் 5 அடிக்கு மேல் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடைப்பட்டு உள்ளது. பயணிகள் ரயில் மூலமே பயணம் செய்து வருகின்றனர்.

பராக்கிரம சமுத்திரத்தின் மடை வாயில்கள் அனைத்தும் திறந்து விடப்பட்டிருப்பதாகவும் —

இதனால் சுமார் 300 வீடுகள் வரை நீரில் மூழ்கியுள்ளதாகவும் ஆயிரம் ஏக்கர் நெற்காணிகள் வெள்ளத்தில் மூடப்பட்டு விட்டதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது (ஒ-5)

## கொலராவின் தாக்கம் மீண்டும் குடாநாட்டில் தீவிரமாகிறது

யாழ்ப்பாணம், டிச. 27

குடாநாட்டில் மீண்டும் வாந்திபேதியின் (கொலராவின்) தாக்கம் காணப்படுகிறது. கடந்த வாரம் முதல் பலர் யாழ். ஆஸ்பத்திரியின் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெள்ளம் ஏற்பட்டு சுகாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாலேயே கொலராவின் தாக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

வெள்ள நிலைமை தொடர்ந்து இருந்தால் கொலராவினால் குடாநாட்டில் பெரும் எண்ணிக்கையானோர் பாதிக்கப்படலாம் என்று வைத்திய அதிகாரிகள் அச்சம் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த வாரம் கொலராவினால் பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இதேவேளை —

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மூன்று பேர் கொலரா நோய்க்கு பலியாகியுள்ளனர். ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுழிபுரம், சங்கானை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுகளிலேயே கொலராவின் தாக்கம் அதிகம் காணப்படுவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

### முச்சந்தி முரளி




### புதிய அவசரகாலச் சட்ட விதிகள்:
## மனித உரிமை நிறுவனங்கள் ஸ்ரீலங்கா அரசு மீது கண்டனம்

கொழும்பு, டிச. 27

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் விதிகளை அரசு பிறப்பித்திருப்பதை நாட்டில் உள்ள சில மனித உரிமை நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் கண்டித்துள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இடம்பெற்றுள்ள விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் ஆணைக்குழுவின் இரண்டு சிபார்சுகளை அடிப்படையாகக் கொண்டு அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் விதிகளை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். — இவ்வாறு பி.பி.சி. செய்தியாளர் ஆனந்த ராஜகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசசார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் இந்தப் புதிய அவசரகால விதிகள் தேவையற்றவை என்றும் —

அந்த விதிகளை அரசு இடைநிறுத்த வேண்டும் என்றும் — இலங்கை குடியியல் உரிமை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

# திரு. சங்கரப்பிள்ளை செல்லத்துரை அவர்களின்

B.Sc. (Chemistry) Dip-In-Ed, S.L.E.A.S II

## ⁂ சேவை நலம் பாராட்டு மலர் ⁂

# வடமராட்சி மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்

வடமராட்சி சகல வளங்களுமுள்ள பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் முக்கிய மூலவளமாக கல்வி விளங்குகிறது. கல்வி என்ற பயிரை நீண்ட காலமாக வடமராட்சிக் கல்விமான்கள் முக்கியத்துவம் கொடுத்து வளர்த்து வந்துள்ளார்கள். அவ்வரிசையில் வடமராட்சி பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு. ச. செல்லத்துரையின் சேவை நலன் பாராட்டு என்பது முக்கியத்துவப்படுகின்றது.


வடமராட்சியில் புலவர்கள் வாழ்ந்த புலோலியில் சங்கரப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனாக 14-12 1933இல் பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வியை புற்றளை மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், உயர் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் 1953இல் இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பு வளாகத்தின் விஞ்ஞானபீடத்தில் சேர்ந்து இரசாயனத்துறையில் சிறப்புப்பட்டத்தைப் பெற்றார். இரசாயனவியலில் அவரது திறமைச் சித்தியால் ஓராண்டு காலம் தற்காலிக உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார்.

1958இல் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றார். அக்காலத்தில் யாழ்ப்பாணம் கல்லூரியில் பட்டதாரி மாணவர்களுக்கு பகுதிநேர இரசாயனவியல் விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். 1960—1975ஆம் ஆண்டு வரை ஹாட்லிக் கல்லூரியில் க. பொ. த. (உ/த) வகுப்புகளுக்கு இரசாயனவியல் ஆசிரியராக சேவை புரிந்ததோடு சில காலம் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையிலும் க. பொ. த. (உ/த) வகுப்புகளுக்கும் கற்பித்தார். இக்காலத்தில் ஹாட்லிக் கல்லூரியில் உருவாக்கப்பட்ட விஞ்ஞானபீட மாணவர்கள் இன்று உலகளாவிய அளவில் பரந்துபட்டு பொறியியலாளர்களாகவும் வைத்தியர்களாகவும் தொழில் புரிந்து இம்மண்ணுக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இவர் 05-04-1975 தொடக்கம் இலங்கை நிர்வாக சேவையில் விஞ்ஞானக்கல்வி அதிகாரியாக பண்டாரவளை கல்வித் திணைக்களத்தில் மூன்றாண்டுகள் இருந்த காலத்தில் முதன்முதலில் தமிழ், சிங்கள பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்தார். பின்னர் 1978 தொடக்கம் 1982 வரை அநுராதபுரம் கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞானக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1982—1990 மாசி வரை யாழ். கல்வித் திணைக்களத்தில் விஞ்ஞானக்கல்வி அதிகாரியாக கடமையாற்றினார். இவர் கடமைக்குச் சென்றபோது இந்திய அமைதிப்படையின் மூர்க்கத்தனமான துப்பாக்கிச் சூட்டுக்கு 26-07-1989இல் இலக்காகிப் படுகாயமுற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பூரண சுகமடைந்த பின்னர் 1990 பங்குனியில் வடமராட்சிக் கல்விக் கோட்டத்திற்கு கல்வி அதிகாரியாக மாற்றப்பட்டார். அன்றுதொட்டு 1991 வைகாசி மாதம் வரை சேவை புரிந்து 1991 ஆனி தொடக்கம் 13-12-1993 வரை பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவை செய்தார்.

இவரின் சேவைக் காலத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் முறைசாராக் கல்வி மூலவள நிலையமும், வட இந்து மகளிர் கல்லூரியில் வணிக மூலவள நிலையமும், தேவரையாளி இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்வியும், வாழ்க்கைத்திறன் கல்வி மூலவள நிலையமும், வதிரி திருஇருதயக் கல்லூரியில் மனையியல் மூலவள நிலையமும், செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் வடமராட்சி கிழக்கு கணித மூலவள நிலையமும், கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் கணித மூலவள நிலையமும் ஆரம்பிக்கப்பட்டு வடமராட்சி மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு அருந்தொண்டாற்றினார்.

வடமராட்சிக் கிழக்கு கஷ்டப்பிரதேசத்தின் நிலைமையை உணர்ந்து அங்கு ஏற்பட்ட ஆசிரிய, தளபாட, கட்டடப் பற்றாக்குறை என்பனவற்றை நீக்குவதற்கு கல்வித் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட்டார்.



திரு சங்கரப்பிள்ளை செல்லத்துரை
B. Sc. (Chemistry) Dip-in-Ed., S.L.E.A.S II

இணைபாட விதான செயற்பாடுகளில் யாழ். மாவட்டத்தில் வடமராட்சிக் கல்விக் கோட்டம் சிறந்த இடத்தைப் பெறுவதற்காக உழைத்தார். குறிப்பாக உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டி என்பவற்றில் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### கல்விப் பணிகள்

தொண்டமனாறு வெளிக்கள நிலையத்தின் அமைப்பாளராகவும் 1988 — 1990 வரை அதன் தலைவராகவும் பணிபுரிந்தார். கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு இணங்க கிளாஸ்ரனின் பௌதிக இரசாயனவியல் நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.

### தொழிற்சங்க நடவடிக்கைகள்:

1960 — 1961 — வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் துணைச் செயலாளர்
1962 — 1963 — வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் செயலாளர்
1966 — 1967 — வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் துணைத் தலைவர்
1970 — 1973 — வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் தலைவர்
1966 — 1972 — வடமாகாண ஆசிரியர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்
1970 — 1971 — பரீட்சைக்குழு உறுப்பினர்
1974 — 1975 — வரையும் — கல்விச் சபையின் தலைவராக பணிபுரிந்த காலத்தில் நடன, நாடகப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

### பொதுப்பணிகள்

1958 — 1963 — தென்புலோலியூர் சனசமூக நிலையத்தின் பொருளாளர்
1968 — 1972 — தென்புலோலியூர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர்
1968 — 1970 — புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபையில் உறுப்பினர்
1967 — 1970 — புலோலி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைக்குழுவின் செயலாளர்
1972 — 1975 — புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆலோசனைச் சபையின் அங்கத்தவர்
1990 — இன்றுவரை — பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் உப தலைவர்
1992 — இன்றுவரை — இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் போஷகர்
1988 — 1991 — இலங்கை சைவமன்றத்தின் தலைவராகவும் சேவை புரிந்தார்.

### குடும்ப நிலை

இவர் ஹாட்லிக் கல்லூரியில் கற்பித்த காலத்தில் அங்கு உதவி ஆசிரியராக கடமையாற்றிய செல்வநாயகி அம்மா கந்தையாவை திருமணஞ் செய்தார். அவர்கள் இரு ஆண் குழந்தைகளையும், இரு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். செல்வநாயகி அம்மா ஆரம்பத்தில் சங்கீத ஆசிரியராகவும், பின்னர் விஞ்ஞான ஆசிரியராகவும் 33 வருடங்கள் சேவையாற்றி 01-12-93 இல் ஓய்வு பெற்றுள்ளார்.

01. செல்வி செ. நளினி — வைத்திய கலாநிதி, கொழும்பு
02. செல்வன் செ. முகுந்தன் — இறுதியாண்டு மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்
03. செல்வி செ. மாதினி — இறுதியாண்டு பொறியியற் பீடம், பேராதனை
04. செல்வன் செ. வைகுந்தன் — க. பொ. த. (உ/த) பௌதிக விஞ்ஞானம் 1993

இவரின் நான்கு பிள்ளைகளும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள். குறிப்பாக செல்வி செ. நளினி, செல்வி செ. மாதினி ஆகியோர் க. பொ. த. (சா/த) புலமைப் பரிசில். செ. வைகுந்தன் 1984 நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்றார். அதே போல க. பொ. த. (சா/த) பரீட்சையில் 7 விசேட சித்தியும், 1 சாதாரண சித்தியும் பெற்றார். மேலும் அண்மையில் வெளியான பரீட்சைப் பெறுபேற்றில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் 3A, B பெற்று மாவட்ட மட்டத்தில் 6 ஆம் இடத்தைப் பெற்றார்.

தொகுப்பு:
பருத்தித்துறை உதயன் செய்தியாளர்.

இவரது பிள்ளைகள் வடமராட்சியிலேயே கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று எமது கல்விச் சமூகத்திற்கு பெருமையைத் தேடித் தந்துள்ளனர்.

இவரின் கல்விப்பணி, பொதுப்பணி என்பன அரசியல் நெருக்கடியான காலகட்டத்தில் வடமராட்சி வாழ் மக்களுக்கு கிடைத்ததையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். அதன் பொருட்டு அவரின் சேவை நலனைப் பாராட்டுகின்றோம். அவர் தொடர்ந்தும் இப்பிரதேசத்திற்கு தொண்டாற்றுவதற்கு இறைவன் நீண்ட ஆயுளை வழங்க வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
கல்விக் கோட்ட உத்தியோகத்தர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
நலன்விரும்பிகள்,
வடமராட்சிக் கல்விக் கோட்ட
அபிவிருத்திச் சபையினர்.

(விளம்பர இல; சி/6766)

## சேவை நலம் பாராட்டுவோர்

- ★ ஆங்கில வைத்தியசாலை, மருதடி, பருத்தித்துறை வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தன்
- ★ குமார் அச்சகம், பருத்தித்துறை
- ★ சிவா றேடிங்கோ, பழைய சந்தை, பருத்தித்துறை
- ★ விநாயகர் தரும நிதியம், மேலைப் புலோலி, பருத்தித்துறை
- ★ அபிராம் அச்சகம், சாரையடி, புலோலி
- ★ நாதன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை
- ★ பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பழைய சந்தை, பருத்தித்துறை
- ★ வேலவன் ஸ்ரோர்ஸ், மருதடி, பருத்தித்துறை
- ★ ராகுலசூரியன்ஸ், பிரதான வீதி, பருத்தித்துறை
- ★ நந்தனாஸ் பழக்கடை, மருதடி, பருத்தித்துறை
- ★ அரவிந் ஸ்ரூடியோ, முதலாம்கட்டை, பருத்தித்துறை
- ★ சுசிலா நகை மாளிகை, முதலாம்கட்டை, பருத்தித்துறை
- ★ பைரவன் றேடர்ஸ், கிராமக்கோடு, புலோலி
- ★ கணேஸ் ஸ்ரோர்ஸ், புலோலி
- ★ கணேஸ் ரேடிங், புலோலி
- ★ அகிலாஸ் பான்சி ஹவுஸ், புலோலி
- ★ வே மனோகரன் சைக்கிள் உதிரிப்பாகம், புலோலி
- ★ பரந்தாமன் ஹோட்டல், மந்திகை, புலோலி
- ★ பிள்ளையார் மருந்தகம், மந்திகை, புலோலி
- ★ பரந்தாமன் மிதிவண்டி உதிரிப்பாகம்
- ★ விபேட்டி மோட்டோஸ், நெல்லியடி, கரவெட்டி
- ★ கிறிஸ்டல், தென்புலோலி, புலோலி
- ★ சந்துரு புத்தகசாலை, பருத்தித்துறை
- ★ ஹாட்லிக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம்
- ★ வேலாயுதம் ம. வித்தியாலயம், பழைய மாணவர் சங்கம்
- ★ புற்றளை ம. வித்தியாலயம், பழைய மாணவர் சங்கம்
- ★ புலோலி ப. நோ. கூ. சங்கம்
- ★ வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
- ★ உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்
- ★ நெல்லியடி கட்டைவேலி ப. நோ. கூ. சங்கம்

## மார்கழி மாத வீதிப் பஜனை

தொண்டைமானாறு, டிச. 27

தொண்டைமானாறு மத்திய சனசமூக நிலைய வாசிகசாலையின் ஏற்பாட்டில் கடந்த 29 வருடங்களாக தொடர்ந்து இடம்பெற்று வரும் மார்கழி மாத வீதிப் பஜனை இம்முறையும் நடைபெறுகின்றது.

மார்கழி மாதத்தில் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரிய அம்பாள் ஆலயத்தில் தினமும் காலை 4 மணிக்கு பஜனை ஆரம்பமாகும். வீதி பஜனை இப் பகுதியிலுள்ள சகல பாதைகள் ஊடாகவும் இடம்பெற்று வருகின்றது.

(த-30)

## விஞ்ஞான நிகழ்ச்சி

வலிகாமம், தெற்கு டிச 27

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம் நடத்த உள்ள பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஜனவரி 14 ஆம் திகதி நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியின் போது விஞ்ஞானம் சம்பந்தமான வினா - விடை போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

இவ்விஞ்ஞான வினா-விடை போட்டியில் சேர விரும்பும் பாடசாலை மாணவர்கள் தமது விண்ணப்பங்களை யாழ். விஞ்ஞானசங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம். (த-152)

## வகுப்புக்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 27

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் இயங்கும் 'நளா' கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பகல் இரவு நேர வகுப்புகள் அனைத்தும் இன்று திங்கட்கிழமையில் இருந்து வழமை போல் நடைபெறுமென்றும்—எனவே கழகத்தில் கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இன்று தவறாது சமுகம் தருமபடியும் நிவகக் கோட்ட மாணவர் அமைப்பின் சார்பாக பொறுப்பாசிரியர் தேட்டுள்ளார். புதிய மாணவர்களும் இன்று சேர்த்துக் கொள்ளப்படுவர். (த)

## இலவச தொழிற் பயிற்சி

வலிகாமம் தெற்கு, டிச 27

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண பேராலயத்தின் பெண்கள் ஒன்றியத்தினரால் இலவச தொழிற்பயிற்சி நெறி வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி முதல் ஆரம்பமாக உள்ளன.

மானிப்பாயில் உள்ள மேற்படி ஒன்றியத்தின் தொழிற் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, கைப்பணி பயிற்சி, சமையற்கலை போன்ற பல்வேறு பயிற்சி நெறிகள் நடைபெற உள்ளன.

(த-152)

## தபால் மூலம் வாக்களிப்பு

கொழும்பு, டிச. 27

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், வவுனியா நகர சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களின் போது தபால் மூலம் வாக்களிக்கவுள்ளவர்கள் எதிர்வரும் ஜனவரி முதல் திகதிக்கு முன் தத்தமது பிரதேச தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டுமாம்.

மேற்படி பகுதிகளுக்கான வாக்காளர் இடாப்புக்கள் கொழும்பிலும் வைக்கப்பட்டிருப்பதாக அரசு பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது.

( த-5)

## உலர் உணவு

தென்மராட்சி, டிச 27

வெள்ளத்தினால் இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் உள்ள எட்டுப் பாடசாலைகளில் தங்கியுள்ள 480 குடும்பங்களுக்கு ஒருவார உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(த-117)


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ராகலி றோட், யாழ்ப்பாணம்.

**OL** EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN CLASSES (8 00 — 1 00)

ஆண்டு 10ஆம், 9ஆம், 8ஆம், 7ஆம், 6ஆம்
(3-15 — 6-00) க்கான அனுமதிகளை
27-12-93 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**ஆரம்பம்: 06 - 01 - 1994**

(சி-6774) — அதிபர்

## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க பொது அறிவுப் போட்டிப் பரீட்சை

### விக்னா கல்வி நிறுவனத்தில்

கல்வி பயின்று அனுமதி அட்டைகளைப் பெற்ற மாணவர்களுக்கு 28 - 12 - 1993 காலை 9-30 மணிக்கு கீழ்கண்ட பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

சுட்டிலக்கம் 01 - 225 வரை
யா/மத்திய கல்லூரி
சுட்டிலக்கம் 226 - 449 வரை
யா/இந்து மகளிர் கல்லூரி

★ விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் முன்னரே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் குறித்த நேரத்தில் பரீட்சை நடைபெறும்.

[சி-6773]



## கேள்வி அறிவித்தல்

### வடக்கு-கிழக்கு மாகாணசபை நிர்மாணத் திணைக்களம்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள பிரதம பொறியியலாளரினால் 1994 ஆம் ஆண்டு தை மாதம் 13ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. வேலையின் விவரம்;
யாழ்ப்பாண செயலக கட்டட திருத்த வேலை முதலாம் கட்டம்
2. ரூபா. ஆறு லட்சத்துக்கு [600,000/-] அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு கட்டடங்கள் / நிர்மாண திணைக்களத்தில் அல்லது ITCAD ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இக் கேள்விகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோராவர்.
3. மேற்படி கேள்விப் பத்திரங்களை 1994 ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி வைப்புக்கு சமர்ப்பிக்க வேண்டிய கீழ்க்கண்ட வைப்புப் பணத்தை ஏதாவது தொரு கச்சேரியில் அல்லது நிர்மாணத் திணைக்களம், நிறைவேற்று பொறியியலாளர், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைப்புச் செய்து கொள்ளலாம்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| யாழ்ப்பாண செயலக கட்டட திருத்த வேலை முதலாம் கட்டம் | 500/- | 3000/- |

கேள்வி ஆவணங்களை இலவசமாக பரிசீலிக்க முடியும். அத்துடன் விபரங்களை நிறைவேற்று பொறியியலாளரிடம் இருந்து காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. கா. விநாயகரத்தினம்,
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத் திணைக்களம்,
வடமாகாணம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
27 - 12 - 1993

[சி-6768]



யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

28 — 12 — 1993

பெருமழை காரணமாக பின்போடப்பட்ட யாழ்ப்பாணம் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 28-12-93 செவ்வாய்க்கிழமை (போயா தினம்) காலை 10-00 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதை பொதுச்சபை உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

அன்பர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும்
எமது கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாகுக.

கூட்டுறவுச் சேவையிலுள்ள

சொலமன் சூ. சிறில், தலைவர்.
திருமதி பு. நவரட்ணம், செயலாளர்.

(சி-6758)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## சிங்களவருக்கு வாய் விலங்கு

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பதினாறு வருடங்களாக ஒரே தொடர்ச்சியாக, ஸ்ரீலங்காவின் ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருக்கிறது. இந்த நீண்ட தொடர் ஆட்சிக் காலத்தின்போது அது பல தவறுகளையும் மக்கள் பணியில் குறைகளையும் விட்டிருக்கிறது. லஞ்சம், ஊழல், ஆயுத வியாபாரம் என்று மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும் குறைவில்லை.

கடந்த பதினாறு வருடங்களில் ஆளுங்கட்சியின் தலைமைப்பதவி மூன்று பேரிடம் கைமாறிவிட்டது. அவர்கள் ஒவ்வொருவரும் தமது பதவிகளைக் காப்பாற்றுவதற்காக அதில் நிலைபெறுவதற்காக தேர்தல்களில் மீண்டும் வெல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் தமது செயற்பாடுகளை முடுக்கிவிட்டனர். செயற்பாடுகளும், தந்திரங்களும் ''கள்ளமூளைகளும்'' ஆளுக்கு ஆள் வேறுபட்டதால் ஐ. தே. க. நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக பதவியில் இருக்க முடிந்தது.

இந்த வகையில், பிரேமதாசாவின் மரணத்தினால் ஜனாதிபதி கதிரையில் விபத்தாக வந்து விழுந்த விஜேதுங்கா—

அடுத்த ஆண்டு இறுதியில் நடக்கும் தேர்தலில் என்ன பாடுபட்டும், எத்துணை அநாகரிகமாக, அலங்கோலமாக, ஜனநாயக விரோதமாக நடந்தேனும் — அந்தக் கதிரையில் மீண்டும் அமர வேண்டும் என்ற திடசங்கற்பம் பூண்டிருக்கிறார்!

தென்பகுதியில் உள்ள மாகாண சபைகள் எல்லாவற்றையும் ஆளுங்கட்சியின் சொத்தாக்கிவிட வேண்டும் என்பதற்காக விஜேதுங்கா நடத்தும் அடாவடித்தனங்களும் சூழ்ச்சிகளும் வெளிப்படையானவையே. அதே போல, தமிழர் பிரச்சினையை அவர் கையாளும் போக்கும் அவர் நோக்கமும் பல தடவைகள் விமர்சிக்கப்பட்டவையே.

தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் சிங்கள மக்களின் கருத்துச் சுதந்திரத்தை பறித்துள்ளது குறித்தும், அதன் பொருட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடும் தண்டனை விதிக்கும் சட்டவிதிகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தது குறித்தும் தெற்கில் பலத்த எதிர்ப்புக் கிளம்பி இருக்கிறது.

தமிழர் பிரச்சினை குறித்த விவகாரத்தை விஜேதுங்கா தவறாகக் கையாளுகிறார். இராணுவத் தீர்வு என்று புறப்பட்டு இப்போது திண்டாடுகிறார். இராணுவத்துக்குத் தோல்வி மேல் தோல்விகள் ஏற்படுகின்றன. இந்த உண்மைகளை சிங்கள மக்கள் தெரிந்து கொண்டால் அங்கு அரசியல் கொந்தளிப்பு ஏற்படலாம். மக்கள் கிளர்ச்சி செய்யக் கூடும்.

இத்தகைய ஒரு நிலை தோன்றாமல் தடுக்குவதற்கே அரசுக்கு எதிரான உணர்வைத் தூண்டும் எதனையும் பிரசுரிக்கக்கூடாது என்று பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டிருக்கிறார்.

இந்த அவசரகால விதிகள் பத்திரிகைகளுக்கு மட்டும் வாய்ப்பூட்டல்ல. எதிர்க்கட்சிகளுக்கும் வாய்ப்பூட்டும் கைவிலங்குமாகும். சிங்கள மக்களுக்கோ அவர்கள் மீது சர்வாதிகாரம் திணிக்கப்படுகிறது. பேச்சு, எழுத்துச் சுதந்திர அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டு அரை அடிமைகளாக்கப்படுகிறார்கள்.

விஜேதுங்காவின் ஜனநாயகத்துக்கு விரோதமான அடாவடித்தனங்களும், அடக்குமுறைகளும் தெற்கில் பெரும் அரசியல் குழப்பங்களுக்கு வழிகோலும். அத்தகைய குழப்பம், கொந்தளிப்பு வரின் விஜேதுங்கா நினைப்பதற்கு எதிர்மாறான விளைவையே அறுவடை செய்ய நேரிடும். தமிழர் பிரச்சினை ஒரு புறம், சிங்களவர் எதிர்ப்பு மறுபுறம் என்ற ஈர்முனை ஈட்டி குத்தும் போது அவரது ஆசைக் கதிரையே பறிபோகினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முதலாம் திகதி தொடக்கம் முழுமையாக

# மாகாணசபையின் செயற்பாடு பிரதேச செயலகங்களிடம்

யாழ்ப்பாணம், டிச 27

பன்முகப்படுத்தப்பட்ட மாகாணசபை அதிகாரங்கள், செயற்பாடுகள் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதேச செயலகங்கள் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்கள் கடந்த ஒருவருடமாக செயற்பட்டு வந்த போதிலும், அவற்றின் செயற்பாடுகள் யாழ். செயலக பிரதி ஆணையாளரின் மேற்பார்வையிலேயே மேற்கொள்ளப்பட்டுவந்தன.

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம், இதுவரை பிரதி ஆணையாளர் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் நிதி வழங்கல் போன்றவை நேரடியாக பிரதேச செயலகங்களுக்கு மாகாண சபையால் வழங்கப்படும் என்றும்— மாவட்ட பிரதி ஆணையாளர் முறை ஒழிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பிரதேச செயலகங்கள் முழுமையாக செயற்படும் வகையில் யாழ் செயலகத்தில் இருந்து ஊழியர்கள் பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (அ 3)

## விவசாயத்தை விரிவுபடுத்த சமாசம் நடவடிக்கை

வலிகாமம்தெற்கு, டிச. 27

அடுத்த ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய செய்கையை விரிவுபடுத்தவும், விவசாய உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் தேவையான முயற்சிகளை யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் மேற்கொண்டு வருகிறது.

அடுத்த ஆண்டுக்கு தேவைப்படும் விவசாய உரம், கிருமிநாசினி, தெளி கருவிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் அளவினை ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடம் இருந்தும் சமாசம் திரட்டி வருவதாகவும் —

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கொழும்பில் இருந்து கப்பல் மூலமாகவும் விவசாய உபகரணங்களும், நுகர்வுப் பொருள்களும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்துக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-152)

## இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் குறைந்தது

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் குறைந்ததை அடுத்து திறந்து விடப்பட்டிருந்த துரிசுகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இரணைமடுக் குளத்தின் நீர் மட்டம் அபாய அளவை நெருங்கியிருந்தது. அதனை அடுத்து இரணைமடுக் குளத்தில் இருந்த 11 துரிசுகளும் திறந்து விடப்பட்டன.

35 அடிக்கு மேல் காணப்பட்ட நீர்மட்டம் தற்சமயம் முப்பத்திஒன்றரை அடியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## அரசசார்பற்ற நிறுவனங்கள் பதிவு குறித்து மௌனம்

அரசு சார்பற்ற நிறுவனங்கள் சமூக சேவைத்திணைக்களத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற அரசின் உத்தரவு குறித்து, அரசு சார்பற்ற நிறுவனங்கள் கருத்து வெளியிடவில்லை.

நாட்டில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 3ஆயிரம் அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன என்றுகூறப்படுகிறது.

இந் நிறுவனங்கள் வடக்கு-கிழக்கில் மனித நேய பணிகளிலும் கிராமிய அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-எ-6)

## செயலகக் கூரை திருத்தப்; முதற்கட்ட வேலை ஆரம்பம்

'கப்பசொனிக்' விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்த யாழ். செயலகத்தின் கூரைப் பகுதியை திருத்தியமைக்கும் வேலைகள் முதற்கட்டமாக உடனடியாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

மழை நீர் கூரை ஊடாக உள்வருவதால் செயலகத்தில் இயங்கும் ஏனைய பிரிவுகளின் வேலைகளும் பாதிக்கப்படுவதால், உடனடியாக கூரை வேலைகளை ஆரம்பிக்குமாறு யாழ். அரச அதிபர் நிர்மாணத் திணைக்களத்தை கேட்டுள்ளார்.

திருத்தவேலைகளுக்கான பொருள்கள் கொழும்பில் இருந்து வந்து சேரும் வரை உள்ளூர் பொருள்களைக் கொண்டு வேலைகளை மேற்கொள்ள நிர்மாணத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (த-3)

## நிராகரிப்பு

பியொங்யாங், டிச. 27

வடகொரியப் பிரதமர் கிம் யொங் நாம் வடகொரிய அணு ஆயுதத் திட்டம் பற்றிய பிணக்கைத் தீர்ப்பதற்கான ஐ. நா. வின் மத்தியஸ்த முயற்சியை நிராகரித்துள்ளார். (க)

## யாழ். மாணவருக்கு பாடபுத்தகம் கிடைப்பது காலதாமதமாகும்

யாழ்ப்பாணம், டிச. 27

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் இம்முறை கிடைப்பது தாமதமாகும் என தெரிய வருகிறது.

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாடப்புத்தகங்களின் தொகை விவரம் கடந்த வருடங்களில் கல்வி அலுவலகத்திலேயே கோரப்பட்டு வந்தன.

ஆனால் இந்த தடவை பாடப்புத்தகங்களின் தொகை பற்றிய விவரங்கள் பிரதேச கல்வி அலுவலகங்களில் கோரப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் 14 பிரதேச கல்வி அலுவலகங்களில் 5 பிரதேச கல்வி அலுவலகங்களின் விவரங்கள் மட்டுமே கொழும்பு கல்வி அலுவலகத்துக்கு கிடைத்தன என்றும்—

மாவட்டத்துக்கு தேவையான முழு விவரமும் கிடைத்த பின்னரே பாடப்புத்தகங்கள் வழங்க முடியும் என்றும்— கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மாவட்டத்தின் முழுத் தொகை பற்றிய விவரம் இவ்வாரம் கொழும்புக்கு அனுப்பப் படவிருப்பதாக யாழ். கல்வி அலுவலகத்தில் இருந்து தெரியவந்தது.

அடுத்தமாதங்களில் கப்பல் வசதிகள் இல்லாத காரணத்தால் பெரும்பாலும் பெப்ரவரி மாதத்திலேயே பாடப் புத்தகங்கள் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-எ)

## உலகில் சகோதரத்துவத்தை மக்கள் நாடவேண்டும்

### நத்தார் செய்தியில் பாப்பரசர்

கொழும்பு, டிச. 27

''மனித குலம் யுத்தத்தை கைவிட்டு உண்மையான சகோதரத்துவத்தை மக்கள் நாட வேண்டும்

பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் விடுத்துள்ள நத்தார் செய்தியில் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

மனிதகுலம் யுத்தத்தை கைவிட்டு உண்மையான சகோதரத்துவத்தின் சவாலை நிறைவு செய்ய வேண்டும்.

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர் ஏனைய இடங்களில் யுத்தம் நடைபெறுவதையிட்டு கவலை தெரிவித்தார்.

பாப்பரசர் தமது நத்தார் செய்தியை பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் 53 மொழிகளில் வாசித்தார்.

ராஜினாமாச் செய்த

## இந்திய நிதியமைச்சருக்கு தொழிலதிபர்கள் ஆதரவு

புதுடில்லி, டிச 27

மத்திய நிதி அமைச்சர் டாக்டர் மன்மோஹன் சிங்கை தொடர்ந்து அமைச்சரவையில் வைத்திருக்குமாறு இந்தியாவின் தொழில் அதிபர்கள் பிரதமர் நரசிம்மராவை கேட்டுள்ளனர்.

பம்பாய் பங்குச் சந்தை பேர ஊழல் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்ற கூட்டுக் குழு அண்மையில் சமர்ப்பித்த அறிக்கையில் அந்த ஊழலுக்கு நிதி அமைச்சும், இந்திய ரிசர்வ் வங்கியும் பொறுப்பேற்க வேண்டும் எனக் கூறப்பட்டதை அடுத்து டாக்டர் மன்மோஹன் சிங் தமது ராஜினாமா கடிதத்தை பிரதமர் நரசிம்மராவிடம் வழங்கியிருப்பது தெரிந்ததே. (த-5)

## அராலியில் வீதிவிளக்கு

அராலி, டிச. 27

வலிமேற்கு பிரதேச சபைப் பிரிவிலுள்ள அராலி மேற்கு கிராம பகுதியில் முக்கிய சந்திகளில் வீதி விளக்குகளை அமைப்பதற்கு இராஜன் கதிர்காமர் பொதுப் பணி மன்ற விளையாட்டுக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அனுமதியை வலிமேற்கு பிரதேச சபை வழங்கியுள்ளது.

அமைப்பு வேலைகளில் மேற்படி விளையாட்டுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது.

## கொலரா தடுப்பு தெருக்கூத்து

வலிகாமம் தெற்கு, டிச. 27

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நவாலி, ஆனைக்கோட்டை, சுதுமலை போன்ற இடங்களில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் கொலரா நோய் வராமல் தடுக்க சுகாதாரமாக வாழும் வழிமுறைகளை விளக்கி தெருக் கூத்துக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்கள் போன்ற பொது மக்கள் கூடும் இடங்களிலும் இத்தெருக் கூத்து நடத்தப்பட்டு வருகின்றது. (த-152)

## வெள்ளத்தால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு நிவாரணம்

வலிகாமம் தெற்கு, டிச 27

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும் நடவடிக்கைகள் வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்கனவே வெள்ளத்தால் இடம்பெயர்ந்த சுமார் இரண்டாயிரத்துக்கு கூடுதலான குடும்பங்களுக்கு நிவாரணமாக அரிசி, சீனி போன்ற பொருள்கள் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சென்றவாரம் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இப்பகுதியில்சுமார் 1300 குடும்பங்கள் வீடு வாசல்களைவிட்டு வெளியேறியுள்ளனர். இவர்களுக்கு வேண்டிய நிவாரணத்தை விரைவில் வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகளை உடுவில் உதவி அரசாங்க அதிபர் எடுத்து வருகிறார். (த 153)

## போசாக்கு நிலைவரம் கணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 27

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் போசாக்கு புனர் வாழ்வு நிலையத்தினரால் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 9 இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் 5 வயதுக்குட்பட்ட 269 குழந்தைகளின் போசாக்கு நிலைவரம் கணிக்கப்பட்டதும் இதில் 5குழந்தைகள் 60வீதத்தினாலும் 103 குழந்தைகள் 85 வீதத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் அறியப்பட்டது.

இவர்களை கொக்குவிலில் உள்ள போசாக்கு புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து பராமரித்து வருகிறார்கள். (த)

## விவசாயிகளுக்கு கடன்

தாளையடி, டிச. 27

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக 40ஆயிரம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

'கெயர்' ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இக்கடன் 20 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. (த-144)

## திருமலையில் நோயாளிகள் பொலீஸாரால் சோதனை

யாழ்ப்பாணம், டிச 27

யாழ்ப்பாணத்தில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காகக் கப்பல் மூலம் திருமலை செல்லும் நோயாளிகள் அங்கு வைத்துப் பொலீஸாரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளிகளும், அவர்களது பொதிகளும் படையினரால் துருவித் துருவிச் சோதனையிடப்படுவதாகவும்- நோயாளிகள் மீது கெடுபிடிகளை மேற்கொள்வதால் அவர்கள் பெரும் அவஸ்தைகளை அனுபவிக்க வேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த- 5)

## மாஓவின் பிறந்த தினம் நேற்று கொண்டாட்டம்!

சீனப் பெருந்தலைவர் மாஓசேதுங்கின் நூறாவது பிறந்த தினம் சீனாவில் நேற்று குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

மாஓசேதுங்க சிறந்த தேசாபிமானியாவார் என்று சீன அரசுத் தலைவர் ஜியாங் ஷமின் தெரிவித்திருக்கிறார். மாஓவின் தவறான கொள்கைகளை நாடு இன்று திருத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தியனமன் சதுக்கத்தில் உள்ள மக்கள் மகா மண்டபத்தில் நடந்த நூற்றாண்டு பிறந்ததினக் கூட்டத்தில் பேசிய அவர்; சீனா தற்போது சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் கூறினார். (த-எ)

# திருவாசகத்தை தினந்தோறும் ஓதினால் அல்லல்கள் தீர்ந்து இன்பம் பெருகும்!

மாதங்களில் சிறந்தது மார்கழி.

மார்கழிக்கு மகிமை தருபவற்றில் ஒன்றான திருவெம்பாவைக் காலம் இது.

திருவாசகம் தந்த மணிவாசகரின் ஆன்மீகத் திருவுள்ளத்தில் இருந்து ஊற்றெடுத்தது தான் திருவெம்பாவை.

திருவெம்பாவையையும், மணிவாசகரையும் ஒன்றே பார்க்கும் இந்தக் கட்டுரையை வடித்தவர்;

வாசுகி சிவராமலிங்கம்

அழுது அழுது அரனடி அடைந்த அன்பர் என்னும் அடைமொழியை அணியாய்க் கொண்டவர் அருள் வாதவூரர். '' அழுதால் உன்னைப் பெறலாமே'' என்பது அவர் திருவாக்கு திருவாதவூரில் திருஅவதாரம் செய்தமையால் வாதவூரர் என வழங்கப்பட்டார். சிவஞானவதியாரின் மணி வயிற்றில் உதித்த மாதவச் செல்வர் அவர். அறிவும், அன்பும், அருளும் ஒரு சேர அமையப் பெற்ற ஆன்மீகச் செல்வர் பதினாறாண்டில் பல்கலை பயின்று பாராட்டுப் பெற்றதனால் பாண்டியன் நாடாளும் முதன் மந்திரிப் பதவியை வழங்கினான் தென்னவன் பிரமராயன். அறிவுக்கரசன் என்ற சிறப்புப் பெயரை மன்னவன் அவருக்கு வழங்கினான். எனவே உன்னதச் சிறப்புடன் தன்னிகரற்று விளங்கினார்.

உலகாளும் உயர் பதவியில் இருந்த போதிலும் உலக வாழ்வில் உவர்ப்புத் தோன்றியமையினால் உயிர்க்கு உறுதுணையாதெனக் கண்டறிவதில் உள்ளம் உளன்றியிருந்தார். பதவி, அந்தஸ்து அவரை உலக வாழ்வுச் சகதியில் இழுக்கவில்லை. அரண்மனை வாழ்விலும் பார்க்க அடியார்க்குத் தொண்டு செய்வதிலும், ஞானாசிரியனை நாடி உண்மையறிவதிலும் நாட்டம் கொண்டார். தாமரை இலைத் தண்ணீர் போன்று பற்றற்று வாழ்க்கை நடத்தினார்.

திருப்பெருந்துறைப் பயணம் அவரது வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது. குருந்த மர நிழலில் குருவைக் கண்டதும் காந்தத்தால் கவரப்பட்ட ஊசி இரும்பு போல ஈர்க்கப்பட்டு கோலம் வேறானார். கொள்கை வேறானார். தன்னையும், பொன்னையும் அன்னை[illegible] மிக்க ஆண்டவனிடம் அர்ப்பணித்து செ[illegible] பாதார விந்தங்களைச் சூட்டினார். கூடும் அன்பினில் கும்பிட்டு வாழ்ந்து பாடும் பணியைப் பணியாய்க் கொண்டார் இதன் மூலம் ஆடும் அரனின் அன்பினை தேடும் பணியில் இறங்கினார்.

உள்ளத்தை உருக்கி ஆனந்தத்தைப் பெருக்கி நம்மை இறைவனிடம் நெருக்கி சிவானந்தப் பேற்றினை வருவிக்கும் திருவாசகப் பாடல்களைப் பாடியமையினால் மன்றுளாடுபவரினாலேயே மாணிக்கவாசகர் என மறுநாமம் சூட்டப்பட்டார். அன்புற்றமர்ந்து என்பினைக் கூட உருக்கக் கூடிய திருவாசகப் பாடல்களை மன்பதையோர் இன்புற்றிருக்கப் பாடியவர் மணிவாசகர். தம்பொருட்டும், எம்பொருட்டும் அவர் பாடியவை திருவாசகமும், திருக்கோவையாரும். இவை பக்திச் சுவை சொட்டும் தோத்திரப் பாடல்கள்.

திருவாசகம் தேன். அதனைப் பூந்தேன் என்பதிலும் பார்க்க மலைத்தேன் எனலாம். அது அருமையும் பெருமையும் உடையது. ஆன்மா[illegible] தத்தை அகற்றி — ''நான்'' [illegible] ஆன்மாவிற்கு முத்திப் பேற்றை அருளவல்லது. அருட் செல்வர்களுக்கு ஆனந்தம் அளிக்கும் மருந்தாக அமையும் தேன் வாழ்க்கையில் அல்லல் அகன்று ஆனந்தம் பெருக வேண்டுமேயானால் தினந்தோறும் திருவாசகப் பாடல்களை ஓதுக. நற்கருப்பஞ்சாற்றினிலே தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது அது என்கின்றார் அருட்பிரகாச வள்ளலார்.

சன்மார்க்கம் நாயக நாயகி நெறியாகும். நாயகனுடைய உடைமைகளை அனுபவிப்பதுடன் நாயகனையும் அனுபவிக்கும் வாய்ப்பு நாயகிக்கு இதன் மூலம் கிடைக்கிறது. இது இரண்டறக் கலந்து இன்புறும் மார்க்கமாகின்றது. மணிவாசகர் இந்த நெறி நின்றவர்.

மணிவாசகர் என்ற தேனீ இறைவன் திருவடி மலரில் மட்டும் உட்கார்ந்து சேகரித்த தேன் திருவாசகம். மண் சுமந்த ஈசனது மலரடிகளில் இருந்து பெற்ற பண் சுமந்த பாடல்கள் திருவாசகப் பாடல்கள். கண் சுமந்த நெற்றிக் கடவுளுடைய விண் செறிந்த பெருமைகளை விளக்கிக் கூறுவது. துறவின் முதிர்ச்சி நிலையும் அன்பு நிறைந்த ஆர்வமும் பண் சுமந்த தமிழும் இதில் பளிச்சிடக் காணலாம்.

துறவின் முதிர்ச்சி என்பது எதையும் விரும்பாத நிலை, அன்பு நிறைந்த ஆர்வம் என்பது இறைவனை சிக்கெனப் பிடித்தல். பண்சுமந்த தமிழ் என்பது நெஞ்சை உருகச் செய்யும் பக்திச்சுவை. இவையனைத்தும் ஒருசேரக் கலந்து, நிறைந்து இதில் பிரவாகிப்பதைக் காணலாம்.

திருவாசகம் வாதவூரரின் ஆன்மீக வாழ்க்கையின் சுயசரிதையாக இருப்பதனால் எம்மை ஈர்த்து இன்பம் விளைக்கின்றது. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது இதனை மெய்ப்பிக்கின்றது. பக்திக்குரிய மொழி தமிழ் என்பதனையும் இது பறைசாற்றுகின்றது.

அழுகின்ற கண்களில்தான் கடவுள் தன்மை பூரணமாகப் பரிணமிக்கும். ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என அவர் வழிகாட்டியுள்ளார். பிரிவு பெருந்துயர் விளைவிக்கவல்லது. இறைவன் பிரிந்து சென்றது மணிவாசகருக்கு சொல்லொணாத வேதனையை அளித்தது. எனவே அவர் அழுதார் அதனால் ஆண்டவன் அருளை யாந்தினார். கூடும் அன்பில் கும்பிட்டு வாழ்ந்தார். இறைவனுடன் இரண்டறக் கலந்தார். இதுதான் இன்ப அன்பு நிலை.

அவரது சிவக்கலப்பு பின் வரும் பாடலில் நன்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

''செய்காட்டுங் கமுகடலித்தில்லையுள்ளார் பொருள்சேட்க
கைகாட்டித்தம் முருவம் காட்டாமல் மறைந்தாரை
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவிய நீராகினார்

நீர் காத்து நிலம் காத்து வளி காக்கும் போது
நீ கொண்ட உடலுக்கு ஆயுள் நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PROFESSIONAL COMPUTER STUDIES

**1. d BASE III PLUS**
(Special Course for Accounts Personnel)

**2. WORD PROCESSING**
(Professional Course for all Secretaries)

**3. G. W.-BASIC**
(Language Suitable for Beginners)

**4. LOTUS 1-2-3**
(Special Course for Account Personnel)

THEORY 40 HOURS
PRACTICALS 25 HOURS
COMMENCING ON: 05 — 01 — 1994 at 3-00 p.m.

For Further Details Contact:

**R KARTHIGESAN**
NO. 476, CHUNDIKULI.
(Near Chundikuli Girls College - Old Park Road Junction)

(28611)


## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு சுப்பிரமணியம்

காரைநகர் மருதடியைச் சேர்ந்த கந்தப்பு சுப்பிரமணியம் 23 - 11 - 93 இல் காலமானார் இவர் காலம் சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், நடராஜமணியம், பேரின்பமணியம், புண்ணியமணியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனேஸ்வரி, மகேஸ்வரி, நியாகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் காரைநகரில் நடைபெற்றன. அந்த அனுஷ்டிப்பு மகன் நடராஜமணியத்தின் இல்லத்தில் இன்று (27 - 12 - 93) நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. நடராஜமணியம்
(மகன்)

"தருலேன் வீடு"
கட்டுடை,
மானிப்பாய். (28614)

### கணேசலிங்கம் தனஞ்செயன்

உடுவில் டச்றோட் மு. கணேசலிங்கம் தவயோகமலர் தம்பதிகளின் மூத்த புதல்வன் தனஞ்செயன் கொழும்பில் 25-12-93 அன்று காலமானார்

அன்னார் ஜலஜா, சுவர்ணலதா, மணிவண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இ. முருகதாஸின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்லம்மா, பொன்னம்மாவின் பேரனும் ஆவார்.

கொழும்பு கனத்தை மயானத்தில் தகனக் கிரியை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
அ கிஷ்ணமூர்த்தி
டச்றோட்,
உடுவில்

மு. கணேசலிங்கம்
148 2/3 சென்.செபஸ்தியான் வீதி,
கொழும்பு-13.

சித்திசெவின் விரார்,
கொழும்பு-11. (6760)

### வைத்திலிங்கம் கிருஷ்ணர்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் கிருஷ்ணர் (25-12-93) சனிக்கிழமை காலமானார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, இராசரத்தினம், குணரட்ணம் (சவூதிஅரேபியா), யோகரட்ணம் (கனடா), புஷ்பராணி (கனடா), தெய்வேந்திரம் (கனடா), வரதராஜா (கனடா) கஜேந்திரன் (கனடா), மனோரஞ்சிதம், சறோஜினிதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், பொன்னுத்துரை, ஜெகஜோதி, சுசிலா, சுவேந்திரன் (கனடா), யோகராணி (கனடா), ரஞ்சனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி குகபாலன் (பிரான்ஸ்), சாரதாதேவி, பத்மாவதி, குலேந்திராதேவி, சிவகுமார் (கனடா), பிரதி, கிருஷ்ணகுமார், சாந்தகுமார், தயாபரன், காண்டீபன், கருணாகரன், குணசீலன், தர்சன், வேணுகானன் (கனடா), பிரசன்னா (கனடா), சகானா (கனடா), நிவேயன், நிரோஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (25.12.93) சனிக்கிழமை சங்கானை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்
கி இராஜரட்ணம்

சங்கானை மேற்கு,
சங்கானை (28613)

### வைத்திலிங்கம் அரசன்

(தாவடி)

(இளைப்பாறிய மாவட்ட கல்வி அதிகாரி)

இளைப்பாறிய மாவட்ட கல்வி அதிகாரி வைத்திலிங்கம் அரசன் சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் லீலாவதியின் (இளைப்பாறிய ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், சுசிலாவின் (யாழ். போதனா வைத்தியசாலை) வளர்ப்புத் தந்தையும், பாலசிங்கம் (பராமரிப்புப் பகுதி, யாழ். பல்கலைக் கழகம்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற வெற்றிவேலு (மலேசியா), மீனாட்சிப்பிள்ளை, விசாலாட்சி, நாகரத்தினம், நடராசா (இளைப்பாறிய உதவி ஆணையாளர், காணி அபிவிருத்தி), குலசேகரம் (இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரரும், காயத்திரி, சுஜந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தகனக் கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி லீலா அரசன்
(மனைவி)

வன்னியசிங்கம் வீதி,
தாவடி. (28615)

## ஆலயங்களில்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோயில் தேர்த் திருவிழா நாளை காலை 9 மணியளவில் நடைபெறும் (ஒ-89)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு புவனேஸ்வரி அம்பாள் சமேத அதிபதீஸ்வரன் கோயில் (ஸ்ரேசனடி அம்மன் கோயில்) நாளை காலை 9 மணிக்கு நடேசர் தேர்த் திருவிழாவும் அன்றிரவு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (ஒ-5)

## இன்று

திருவெம்பாவை உற்சவத்தை ஒட்டி ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் சைவசமயப் பரீட்சை இன்று திங்கள் பிற்பகல் 2மணிக்கு இந்த இளைஞர் மன்ற அலுவலகத்தில் நடைபெறும். (த-17)

★ ★ ★

தொடர்ந்து பெய்த மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கைத் தொடர்ந்து பரவி வரும் தொற்று நோய்களுக்கான தடுப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயும் கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சுகாதாரப் பணிமனையில் இன்று நடைபெறவுள்ளது. (ஒ 111-5)

★ ★ ★

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆண்டு ஒன்பது மாணவிகளுக்கான குறு வினாப்போட்டி இன்று திங்கள் காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஒ 28)

★ ★ ★

யாழ் மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு இடையேயான கட்டுரை மற்றும் பேச்சு போட்டிகள் இன்று யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் இந்தப் போட்டிகளை நடத்துகின்றது. (ஒ-30-135)

★ ★ ★

கட்டைவேலி மெதடிஸ்த ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை கட்டைவேலி சேகர பங்குக்குரவர் அருட் திரு எஸ்.எஸ்.ஞானராசா தலைமையில் ஒளிவிழா நடைபெறவுள்ளது.

(ஒ-173)

## தீப இசை அரங்கு

யாழ்ப்பாணம், டிச. 27

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோயிலில் பௌர்ணமி தீப இசையரங்கு நாளை செவ்வாய் மாலை 6 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீப இசையரங்கில் சங்கீத வித்துவான் திரு எம் ஸ்ரீரங்கநாதனின் இசைக்கச்சேரி இடம்பெறும். (ஒ-5)

## தேர்தலில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டமான் சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரும் வாய்ப்பு அதிகம் உண்டு எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது

ஜனாதிபதி விஜேதுங்கா தன்னை உதாசீனம் செய்கிறார் என்பதனைப் புரிந்து கொண்ட அமைச்சர் தொண்டமான் தனது பலத்தைக் காட்ட வேண்டும் என்பதற்காகவே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடனும் திரு காமினி திசநாயக்காவுடனும் தொடர்பு வைத்தார் என்று முன்னர் கருதப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஆளுங்கட்சியினர் சிலர், தொண்டமானைத் தம்முடன் வைத்திருக்க முயன்றனர். ஆனால் அதற்கான பேச்சுக்கள் அனேகமாக முறிவடைந்து விட்டன.

மத்திய மாகாண சபை விவகாரத்தில், இ. தொ. காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏழு பேரையும். ஜனாதிபதியே சடத்துவித்து நிலைமையை மோசமாக்கினார் என்பதறிந்து தொண்டமான் மிகவும் ஆத்திரமுற்றிருந்தார். எனக் கூறப்படுகிறது.

இ. தொ. கா. செயலாளர் செல்லச்சாமியையும் அவரின் ஆதரவாளர்களையும் தமது பக்கம் சேர்த்து காங்கிரஸை உடைக்க ஜனாதிபதி திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறார்.

இதனால் தொண்டமான் ஐ தே. கட்சிக்கு அளித்து வரும் ஆதரவை விரைவில் விலக்கிக் கொண்டு தமது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்வார் என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்காவுக்கு ஆதரவளிப்பதாக தொண்டமான் வாக்குறுதி அளித்துவிட்டார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

திரு தொண்டமானும், திருமதி பண்டாரநாயக்காவும் நடத்திய பேச்சுக்களின் போது பல விடயங்கள் தொடர்பாக இணக்கம் காணப்பட்டதாகவும்—

ஆனால் அவை உரிய நேரத்திலேயே வெளியிடப்பட வேண்டும் என்று இரு சாராரும் இணங்கி இருப்பதாகவும் —அறியப்படுகிறது.

இணங்கப்பட்ட விடயங்களில் தோட்டத்துறை, மலையகத் தமிழரின் அரசியல் பிரச்சினை என்பனவற்றுடன், இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதும் அடங்கும் எனச் சொல்லப்படுகிறது. (அ-154)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிச 27

ஜி.சீ.ஈ உயர்தர கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 8.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

பௌதிகவியல் பாடத்துக்கான செயலமர்வை யாழ். தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியும்—

தாய, பிரயோக கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகளை யாழ் வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. கே. கந்தசாமியும் தொடக்கி வைப்பர். (ஒ-5)

## சுகாதார கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 27

'சுகநல தகவல் தொடர்பு' பற்றிய கருத்தரங்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி மருத்துவமண்டபத்தில் நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடக்கும் இக் கருத்தரங்கில் யாழ். உளவளத்துறைப் பணிப்பாளர் திரு. பி. ஏ. சி ஆனந்தராசா கருத்துரை வழங்குவார். (ஒ-18)

## புலிகளா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாகக் காட்டும் இராணுவத்தால் அவர்களை வெல்லமுடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இரண்டாம் ஈழப்போர் காலத்திலேயே நான்கு இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டுள்ளனர்.

கிளாலி, மணலாறு ஆகிய இடங்களில் இராணுவம் பெரும் தோல்விகளைச் சந்தித்தது இவற்றில் இருந்து பாடங்களைப் படித்துக்கொள்ளாத இராணுவம் பூநகரித் தோல்வியில் இருந்து எப்படிப் பாடத்தைக் கற்றுக்கொள்ளப் போகிறது?

யாழ்தேவி நடவடிக்கை, பூநகரி தாக்குதல்—இவற்றில் ஏற்பட்ட தோல்விகளையும் இழப்புகளையும் இராணுவம் பத்திரிகைகள் மூலம் தமக்கு வெற்றியாகக் காட்டியது.

நாங்கள் தவறுகளைத் திரும்பவும் விடுவதில்லை என்பதைப் பலமுறை நிரூபித்துக் காட்டிய விடுதலைப் புலிகளிடம் இராணுவம் பலத்த இழப்புக்களைச் சந்திப்பது தவிர்க்கமுடியாதது—என்றும் அப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (ஒ-5)

## வைகோ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட 250 பொதுக் குழு உறுப்பினர்கள் மட்டுமே, கோபாலசாமி கூட்டிய கூட்டத்தில் கலந்து கொண்டனர் என்றும் கருணாநிதி கூறினார். (ஒ-எ)


## பெயர் மாற்றம்

### அன்ரன் லக்ஷா நகைப்பூங்கா

என்னும் பெயரில் இயங்கி வந்த ஸ்தாபனம் இன்று முதல்

# கல்யாணி தங்க மாளிகை

என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகிறோம். யாவர்க்கும் எமது

**நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக**

கல்யாணி தங்க மாளிகை,
இல 189/A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(28603)


உரும்பராய் வடக்கு
கணேசா சனசமூக நிலையத்தினரால் 25-12-93 சீட்டிழுப்பில்

## பரிசு பெற்றோர் விவரம்

| இல | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1 ஆம் பரிசு — 0863 | செல்வன் ஜெ. சதீசன் | விநாயகர் வியாபார நிலையம் உரும்பராய் வடக்கு |
| 2 ஆம் பரிசு — 1150 | திரு. க. தருணகுலசிங்கம் | மின்விநியோகப் பகுதி யாழ். மாநகரசபை |
| 3 ஆம் பரிசு — 0705 | திரு சி. பிரசாத் | உரும்பராய் கிழக்கு |
| 4 ஆம் பரிசு — 1353 | சிவஸ்ரீ மு. ஜயாத்துரை குருக்கள் | கற்பக விநாயகர் ஆலயம் உரும்பராய் |
| 5 ஆம் பரிசு — 2798 | செல்வி ந. பூரணி | "பழமுதிர்ச்சோலை" பொற்பதி வீதி, கொக்குவில். |
| 6 ஆம் பரிசு — 0093 | திரு. ஆ. நந்தகுமார் | கூட்டுறவு அலுவலகம், யாழ்ப்பாணம். |
| 7 ஆம் பரிசு — 0559 | செல்வி கே. வினோதினி | 'செல்வஸ்தான்' உரும்பராய் கிழக்கு |
| 8 ஆம் பரிசு — 0323 | செல்வி பி. ஜெனனி | 1ஆம், 2ஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். |

குறிப்பு:- உங்களுக்குரிய பரிசுகளை 1-1-94 சனிக்கிழமை பி. ப. 2.30 மணிக்கும் 5மணிக்கும் இடையில் மேற்படி நிலையத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி.
இங்ஙனம்
நிர்வாக சபையினர்

(28619)

## மனித உரிமை நிறுவனங்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடு முன்னர் அரசு அவசரகால விதிகளை அமுலாக்கியுள்ளதை இனங்களுக்கு இடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கமும் கண்டித்துள்ளது

அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான அரசின் இத்தகைய அழுத்தங்களால் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என நாட்டிலுள்ள பெரிய அரச சார்பற்ற நிறுவனமான சர்வோதய இயக்கம் அரசைக் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஒ-6-5)


## அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்

# திருவெம்பாவை மஞ்ச உற்சவம்

எதிர்வரும் (28-12-1993) செவ்வாய்க்கிழமை காலை 5மணிக்கு நடேசப் பெருமானுக்கு விசேட பூசையும் அதனைத் தொடர்ந்து நடேசப் பெருமான் திருமஞ்சத்தில் திருவுலா வரும் காட்சியும் மறுநாள் அதிகாலை 2-30 மணிக்கு நடேசப் பெருமானுக்கு சங்காபிஷேகமும் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

— உபயகாரர்

[28610]



## மாருதியின் புதுவருட புதிய வெளியீடுகள்

**செந்தூர பாண்டி** விஜயகாந்த், கவுண்டமணி, செந்தில்

**கிழக்கே வரும் பாட்டு** பிரசாந்த் சர்மிளா நம்பியார்

**பகவான்** ம. முட்டி, கீதா

**கமேண்டர்** நாகர்ஜுன், கீதா

**காலேஜ் ரோஜா** வினோத்குமார், ரோஜா, மனோரமா, செந்தில்

**புதிய தொடக்கம்** சரத்பாபு, ரேவதி

**வருவான் மணிகண்டன்** முன்னணி அபிமான நட்சத்திரங்கள்

**துர்க்கை விரதம்** K R விஜயா, சீனிவராஜ்

# மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வராச் சந்தி திருநெல்வேலி.

[28612]


## யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன வேண்டுகோள்

க. பொ. த. உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான, பட்டப்படிப்பு பிரிவுகளுக்கான பாடத்திட்டம் தயார் செய்ய வேண்டியுள்ளதால் சகல துறைகளையும் சேர்ந்த ஆசிரியர்களை பின்வரும் நேர அட்டவணைப்படி 29-12-93 புதன்கிழமை எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்திற்கு வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

| | | |
|---|---|---|
| கலை வர்த்தகம் | — மு.ப | 10.00 |
| விஞ்ஞானப் பிரிவு | — மு.ப | 11.00 |
| பட்டப்படிப்பு | — ந.ப | 12.00 |

### முக்கிய அறிவித்தல்

இது வரை காலமும் பதிவு செய்யாமல் இயங்கி வந்த சகல தனிப்பட்ட வகுப்புகளையும் 05-01-94க்கு முன்னர் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். 05-01-94க்கு பின்னர் பதிவு செய்யாத எந்த ஒரு தனிப்பட்ட வகுப்புகளும் இயங்க இயலாது என்பதை அறியத் தருகிறோம்

-பொதுச்செயலாளர்

(சி/6778)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 04 — 04 — 1931



மறைவு: 10 — 01 — 1991

### செல்லத்துரை சிவதாசன் (சிவபாதம்)

திதி:- 27-12-1993

எங்களை விட்டுப் பிரிந்து மூன்றாண்டு மறைந்தாலும் உங்கள் நினைவால் வாடும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சுழிபுரம் மேற்கு.
சுழிபுரம். (6759)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 12 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org